28th August 1970]

மாண்புமிகு திரு. சே. வேழவேந்தன் : முக்கியமாக இந்த மறுவாழ்வு நிலையம் ஏறக்குறைய 750 தொழுநோய் பற்றியிருக்கிற பிச்சைக்காரர் களுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பின்னுல் விரிவுபடுத்தவும் செய்யலாம்.

DEPUTY CHAIRMAN : Questions are over.

(*Note*:—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

II. COMPLAINT *Re* OBSTRUCTION CAUSED BY THE POLICE TO A MEMBER OF THE LEGISLATIVE COUNCIL ATTENDING THE MEETING OF THE COUNCIL.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பகல் சுமார் 1.30 மணிக்கு இங்கே சட்டசபைக் கூட்டத்திற்கு வந்து பணி செய்கிற முறையில் வந்து கொண்டிருக்கிற போது, இரும்புப் பாலத்தின் பக்கத்தில் நான் வந்துகொண்டிருந்த டாக்சியைப் போலீசார் நிறுத்திவிட்டார்கள். அவ்வாறு நிறுத்திவிட்டு, ''இந்தப் பக்கமாகப் போகக் கூடாது'', என்று சொன்னுர்கள். உடனே நான் சொன்னேன் ''நான் ஒரு சட்ட சபை உறுப்பினர். அந்தப் பணிக்காகச் சென்று கொண்டிருக்கிறேன்'' என்று அவர்களிடம் சொன்னேன். அவர்கள் ஒன்றும் என்னை மரியாதைக் குறைவாக நடத்தவில்லை. அப்படிக் குற்றம் சாட்ட விரும்பவில்லை. ''இந்தப் பக்கமாகப் போவதற்கு அனுமதிப்பதில்லை, நீங்கள் திரும்பிச் சென்று மவுண்ட் ரோடு வழியாகத்தான் போக வேண்டும்'', என்றுதடை செய்துவிட்டார்கள். இம்மாதிரியாகச் சபை உறுப்பினர்கள் தங்கள் கடமையைச் செய்ய வரும்போது அவர்களுக்கு உள்ள உரிமை பறிக்கப்படுவதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து இத்தகைய நிலைமைகள் இனி ஏற்படாத வாறு நம்முடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இன்று பிற்பகல் ஹரிஜன நலத் துறை அமைச்சரைச் சந்திப்பதற்காக வந்த மாணவர் கூட்டத்தினர் அந்த இடத்திலே நிறுத்தப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய பிரதிநிதிகள் சில பேர் ஹரிஜன நலத் துறை அமைச்சரைச் சந்திப்பதற்காக உள்ளே வந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிப்பதாகவும், அது பற்றி சிந்தித்து முடிவு எடுப்பதாகவும் ஹரிஜன நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாணவர்களுடைய பிரதிநிதிகளுக்குச் சொல்லியும்கூட, அந்த மாணவர்கள் அந்த இடத்திலே நின்று கொண்டு ஆர்பாட்டங்களிலே ஈடுபட்டார்கள். அப்படி ஆர்பாட்டங்களிலே ஈடுபட்ட நேரத்தில் அந்த வழியாக வருகின்ற கார்கள் அவர்களுடைய கவனத்தைத் திருப்பத் தக்க வகையிலே அமைந்தன. ஆகவேதான் போலீஸ் அதிகாரிகள் நம்முடைய மாண்புமிக்க உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள்

கூறியதைப்போல், அவர்களை வேறு வழியாகச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த வழியாகச் செல்லுங்கள் என்று அவர்களை அனுமதித்திருப்பார்களானால், திரு. சா. கணேசன் அவர்கள் எனக்குப் பாதுகாப்பில்லாமல் போலீசார் செய்துவிட்டார்கள் என்கின்ற குறைபாட்டினை இங்கே சொல்லியிருக்கக்கூடும். ஆகவேதான் போலீசார் மாண்புமிக்க உறுப்பினர் அவர்களுடைய பாதுகாப்பைக் கருதி இந்த நல்ல காரியத்தில் ஈடுபட்டார்கள் என்று கொண்டிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY CHAIRMAN : The hon. Member Thiru Saw. Ganesan has given only information. It has not come up as a Privilege Motion. It is not in that form. The Chairman cannot take note of it. It is for the Leader of the House to reply and he has replied. The matter ends there.

III. STATEMENT CORRECTING ANSWER TO STARRED QUESTION No. 12

5–00 p.m. The HON. THIRU. V. R. NEDUNCHEZHIYAN: Mr. Deputy Chairman, Sir, while furnishing answer to the Legislative Council Question No. 12 (Starred) on 27-8-1970, it was stated in general that the committee constituted to go into the service conditions of teachers would attend also to the work of codification of the rules relating to elementary and high schools. In addition to the above, I would like to bring to the notice of the Council that rule 83 in Chapter VII of the Madras Educational Rules was amended on 5th February 1970 by G.O. No. 187, to make it clear that the management of any institution should not levy fee from any student or any class of students for any course that has been declared by Government to be one where no fee should be levied. I shall also place a copy of the G.O. on the table of the House.

IV. CALLING ATTENTION TO DENIAL OF INCREASED MINIMUM PENSION OF Rs. 30/- TO RETIRED AIDED SCHOOL TEACHERS AND RECOVERY OF Rs. 10/- OF MINIMUM PENSION FROM RETIRED DISTRICT BOARD AND PANCHAYAT UNION TEACHERS.

THIRU M. RAJAH IYER : Mr. Deputy Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education and Health to a matter of urgent public importance, namely, the denial of the increased minimum pension of Rs. 30/- with effect from 1st April 1970 to retired aided school teachers and the recovery of the increase of Rs. 10/- to the minimum pension so far paid from 1-4-1970 to retired District Board and Panchayat Union Teachers, and the consequent inconvenience and distress caused to the retired teachers.